செ.வெ.எண்: 118 நாள்: 17.03.2017

# OVERSEAS MANPOWER CORPORATION LIMITED

(A Government of Tamilnadu Undertaking)
Regn.No. B-0821/MAD/CORP/1000+/3/308/84, dt. 20.06.1984
CIN : U99999TN1978SGC007660

டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப.
நிர்வாக இயக்குநர்

2.3.2017

## செய்திக் குறிப்பு

வெளிநாட்டு வேலைவாய்ப்பினை நாடுவோரின் நலனைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசால் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் மூலம் இன்ஜினியர்கள், டெக்னிசியன்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், லேபர்கள் மற்றும் தொழிற்திறன் பெற்ற தொழிலாளர்கள் பெருமளவில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தற்போது, குவைத் நாட்டிலுள்ள ஓர் முன்னணி தனியார் நிறுவனத்திற்கு 10-ஆம் வகுப்பு தேர்ச்சியுடன் 22 முதல் 40 வயதிற்குட்பட்ட லேபர்கள் பெருமளவில் தேவைப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்படும் லேபர்களுக்கு உணவு மற்றும் இருப்பிட வசதியும் சேர்த்து ரூ.33000/- ஊதியத்துடன் இலவச விமான டிக்கெட் மற்றும் குவைத் நாட்டின் சட்டதிட்டத்திற்குட்பட்ட இதர சலுகைகள் வழங்கப்படும்.

மேலும், ஓமன் நாட்டிலுள்ள ஒரு முன்னணி நிறுவனத்திற்கு 10-ஆம் வகுப்பு தேர்ச்சியுடன் ஏதாவது ஒரு நிறுவனத்தில் இரண்டு வருட பணி அனுபவத்துடன் 22 முதல் 26 வயதிற்குட்பட்ட (இயந்திரம் இயக்குபவர்களாக (Machine Operators) தேவைப்படுகிறார்கள்.அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு தகுதி மற்றும் அனுபவத்திற்கேற்ப ரூ.25,000/– வரை ஊதியம், இலவச இருப்பிட வசதி வழங்கப்படும்.

எனவே, தகுதியுள்ள லேபர்கள் மற்றும் இயந்திரம் இயக்குபவர்கள், சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வி, அனுபவம், பாஸ்போர்ட் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் ஒரு புகைப்படத்துடன் நேரிலோ அல்லது omcresum@gmail.com எனும் இந்நிறுவன மின்னஞ்சலில் 10.3.2017க்குள் அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும், விவரங்களுக்கு 044–22505886/22502267 என்ற தொலைபேசி மூலமாகவோ அல்லது www.omcmanpower.com என்ற இந்நிறுவன வலைதளத்திலும் அறிந்து கொள்ளலாம்.

நிர்வாக இயக்குநர்

//

**Registered Office :**
Integrated Employment Office Complex,
No. 42, Alandur Road, Guindy,
Chennai - 600 032.